**Deposition of Witness**
**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, THIRUMAYAM**

**O.S. No. 242 /2023**

Deposition of – PW2

| | | | |
|---|---|---|---|
| Name : | பாண்டித்துரை | Caste : | |
| Name : | கருவன் | Calling : | விவசாயம் |
| Village : | பட்டறைச்சேரி | Religion: | |
| District : | புதுக்கோட்டை | Age : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.10.2024

**முதல் விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்தது. அதன்பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் வாதி, பிரதிவாதி எனக்கு நன்கு தெரியும். நான் வாதியின் நண்பர். பிரதிவாதிக்கு வாதி பணம் கொடுக்கும்போது பிரதிவாதியை தெரியும். வாதி பிரதிவாதிக்கு 2016 ஜுன் 20-ம் தேதி இடத்தை கிரையம் பெறுவதற்காக பணத்தைக் கொடுத்தார். ரிஜிஸ்டர் ஆபிஸில் வைத்து வாதி பிரதிவாதிக்கு ரூ.4 லட்சத்தைக் கொடுத்தார். அந்த இடம் 6 சென்ட் ஆகும். மீதி பணம் ரூ.5 லட்சத்தை ஒரு வருடத்திற்குள் கொடுத்து பதிவு செய்ய ஒப்புக்கொண்டார்கள்.

(**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்